# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 114/2012 | Date : 16.02.2024 | RW1 |
|---|---|---|
| Name: வைத்தீஸ்வரன் | S/o.மாணிக்கம் | |
| Evidence Recorded Time: 3.20 P.M. to 4.15 P.M. | | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் நான் தான் 2வது நிறுவனமான நாங்களே ஒரு தரப்பினராவோம். விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரரோ அவது ஓட்டுநரோ காவல் நிலையத்தில் ஏதாவது புகார் கொடுத்தது தெரியுமா என்றால் புகார் ஏதும் கொடுக்கவில்லை. விபத்தில் சம்மந்தப்பட்ட TN 52 X 5897 அந்த வாகனம் மகேந்திரா மேக்ஸிமோ என்ற 4 சக்கர வாகனமாகும். மேற்படி பதிவு எண் கொண்ட வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் முழுமையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அபிடவிட்டில் சொல்லி உள்ள கிளைம் பார்ம் ஆனது மேற்சொன்ன குற்ற வழக்கில் குற்ற பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் தெரியாது. மேற்சொன்ன குற்ற வழக்கு சம்மந்தமான தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கில் நாங்கள் தாக்கல் செய்த ஆவணங்களை நாங்களே தயார் செய்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சம்மந்தமாக மேச்சேரி காவல் நிலையத்தார் குற்ற பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது என்றால் தாக்கல் செய்யப்பட்டது. வண்டியின் பெயரை பொறுத்து பிரமாண பத்திரிகையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வண்டி எண். சரியாக குறிப்பிடப்ட்டுள்ளது. மேற்படி வழக்கு குறித்து முதலில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் இறந்த போன நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்பு அதே வழக்கில் புலனாய்வு முடிக்கப்பட்டு இறுதியாக 1ம் எதிரியின் ஓட்டுநர் எதிரியாக சேர்க்கப்பட்டார் என்றால் சரியல்ல. மேற்படி 1ம்எதிர்மனதாரர் டிரைவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு அதை பொறுத்து காவல் துறை மேல் அதிகாரிகளுக்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க மனு கொடுத்தோமா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரரின் ஒட்டுநர் மீத தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை சம்மந்தமாக நாங்கள் நீதிமன்றத்தை அனுகி முறையீடு செய்தோமா என்றால் இல்லை. மேச்சேரி காவல் நிலையத்தார்

நன்கு புலனாய்வு செய்து வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற காரணத்தினால் தான் நாங்கள் அந்த குற்றப்பத்திரிகை மீது மேல் நடவடிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எப்சி, காப்பீடு, பர்மிட், ஆகியவை சரியாக இருந்தது என்றால் சரிதான். இழப்பீடு வழக்கீடு தொகை குற்றவியல் நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபத்தை பொறுத்து காப்பீடு விதிகள் சரியான முறையில் இருக்கிறது என்றால் சரிதான். மேச்சேரி காவல் நிலையத்தார் சரியாக புலனாய்வு செய்து 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் ஆகவே 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் காப்பீடு நிறுவனத்தார் என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

விபத்து நடந்த தேதி என்ன என்று கேட்டால் 14.09.2011 ஆகும். நான் சென்னையில் உள்ள 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 2007லிருந்து பணியாற்றி வருகிறேன். 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் சென்னை அண்ணா சாலையில் உள்ளது. நான் தலைமை அலுவலகத்தில் லீகல் செக்சனில் வேலை பார்க்கிறேன். மேற்படி வழக்கை பொறுத்து எங்களுக்கு எப்போது அழைப்பாணை வந்தது என்றால் நினைவில்லை. மனு எந்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சேலம் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக எங்கள் நிறுவனம் அல்லது 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் எங்கள் நிறுவனத்தில் இருந்து கொடுக்கவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் அல்லது அவரது ஓட்டுநர் கொடுத்தாரா என்று எங்களுக்கு தெரியாது. இந்த விபத்து சம்மந்தமான குற்றப்த்திரிகை எங்கள் கோப்பில் உள்ளதா என்றால் உள்ளது. அது 1ம்எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனதாரரின் ஓட்டுநரின் மீது குற்றப்பத்திரிகை தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எங்கள் நிறுவனத்தின் சார்பாக காவல் உயர் அதிகாரிகளுக்கோ அல்லது குற்றவியல் நீதிமன்றத்திலோ எந்த விதமான சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக விசாரணை செய்ய யாராவது அதிகாரிகளை நியமனம் செய்தீர்களா என்றால் செய்தோம் என்றால் சரிதான். என்ன தேதியில் யாரை நியமனம் செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால்

முடியும். சுந்தரம் என்பவரை புலனாய்வு அதிகாரியாக நியமனம் செய்தார்கள்.27.10.2012 ல் நியமனம் செய்தார்கள். மேற்படி சுந்தரம் மேற்படி சம்பவம் பற்றி விசாரித்து எங்களிடம் எப்போது அறிக்கை சமர்பித்தார்கள் என்றால் 21.11.2012 ல் சமர்பித்தார். மேற்படி அறிக்கையை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சுந்தரம் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 1–ம்எதிர்மனு தாரரின் ஓட்டுநரை இந்த வழக்கில் சாட்சியாக இது வரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.1 ஐ நாங்கள் முழுமையாக படித்து பார்த்தோம் என்றால் படித்து பார்த்தோம். அதில் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்படவில்லை என்று இருக்கிறது என்றால் அவ்வாறு குறிப்பிட்டு இல்லை. அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றுதான் உள்ளது. குற்றவியல் வழக்கில் நாங்களோ 1ம் எதிர்மனுதாரரோ சாட்சியம் அளித்தோமா என்றால் இல்லை. எ.மா.சா.2 கிளைம் பார்ம் ஆனது வண்டி ஓனரிடம் இருந்து இந்த வழக்கிற்ககாக தயாரித்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிளைம் பார்ம் குறித்து என்னுடைய எதிருரையிலும், கூடுதல் எதிருரையிலும் சொல்லவில்லை என்றால் சரியில்லை. நான் உண்மையில் கிளைம் பார்ம் வாங்கியிருந்தால் அதை பொருத்து எதிரூரையிலும், கூடுதல் எதிருரையிலும் தெரிவித்திருப்போம் என்றால் சரியல்ல. 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று எப்போது மனு கொடுத்தேன் என்றால் தேதி தெரியவில்லை. எதிருரை வழக்குரை நகல் எங்கள் கோப்பில் உள்ளதா என்றால் உள்ளது. அதில் யார் கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் நான் தான் கையொப்பம் செய்துள்ளேன். குற்றவியல் வழக்கு தீர்ப்பாணது இந்த வழக்கில் நடைமுறைகளுக்கு பொருந்தாது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறப்பட்ட காரணத்தினால் தான் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து 2012 முதல் தற்போது வரை மனுவை இழுத்தடிக்கிறோம் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாருடைய வாகனம் முழுமையாக எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் பொருத்தவரை காப்பீடு விதிகள் இல்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் மட்டுமே காப்பீடு வழங்க வேண்டும் என்றாலும் 4ம்எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்கவேண்டிய கடமை இல்லை

என்றாலும் சரியல்ல.ஆகவே மனு 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய் சாட்சி அளிப்பதால் என் சாட்சியம் நிராகரிக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–RW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.